


**27. 06. 2026**

தலைப்புச் செய்திகள்

1. இந்திய பசிபிக் பிராந்தியத்தின் வளர்ச்சியில் செஷல்ஸ் முக்கிய பங்கு வகிப்பதாக பிரதமர் திரு. நரேந்திரமோடி தெரிவித்துள்ளார்.

2. பிரபல திரைப்பட இயக்குனரும் நடிகருமான பாக்யராஜ் சென்னையில் மாரடைப்பால் இன்று காலமானார்.

அன்னாரது உடலுக்கு முதலமைச்சர் திரு. விஜய் நேரில் அஞ்சலி செலுத்தினர்.

3. தமிழக பேரிடர் நிதிக்கு மத்திய அரசு ஆயிரம் கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்துள்ளதாக மாநில பேரிடர் மேலாண்மை துறை அமைச்சர் திரு. செங்கோட்டையன் கூறியுள்ளார்.

4. கால்நடை பராமரிப்புத்துறை டிஜிட்டல் மயமாக்கப்பட்டு வருவதாக இத்துறைக்கான மாநில அமைச்சர் திருமதி கமலி குறிப்பிட்டுள்ளார்.

5. திமுக கூட்டணியிலிருந்து மதிமுக விலகியுள்ளது.

இனி விரிவான செய்திகள்

***********

பிரதமர்

இந்திய பசிபிக் பிராந்தியத்தின் வளர்ச்சி மற்றும் உலகளாவிய தெற்கு கொள்கையில் செஷல்ஸ் முக்கிய பங்கு வகிப்பதாக பிரதமர் திரு.நரேந்திரமோடி தெரிவித்துள்ளார்.

மூன்று நாள் பயணமாக செஷல்ஸ் புறப்படும் முன் பிரதமர் வெளியிட்டுள்ள அறிக்கையில் தமது இந்த பயணம் இரு நாடுகளுக்கிடையிலான நம்பிக்கை ஜனநாயக மாண்புகள் மக்கள் தொடர்பை மேலும் வலுப்படுத்தும் என்றார்.

செஷல்ஸ் நாட்டின் சுதந்திர தின பொன்விழா கொண்டாட்டங்களில் சிறப்பு விருந்தினராக பங்கேற்கும் பிரதமர் அந்நாட்டு அதிபர் Patrick Herminie உடன் இருதரப்பு உறவுகள் குறித்த பேச்சுவார்த்தைகளை மேற்கொள்கிறார்.

***********

மன்கீபாத்

அகில இந்திய வானொலியில் மன் கி பாத் மனதின் குரல் நிகழ்ச்சியில் 135-வது முறையாக பிரதமர் நாளை காலை 11 மணிக்கு உரையாற்றுகிறார்.

அனைத்து வானொலி நிலையங்கள், தூர்தர்ஷன், பிரதமர் அலுவலக யூடியூப் அலைவரிசை, mygov இணையதளம், newsonair செயலியில் இந்நிகழ்வு நேரடியாக ஒலிபரப்பாகும்.

தொடர்ந்து பதினொன்றரை மணிக்கும் இரவு 8 மணிக்கும் இதன் மொழியாக்கம் இடம்பெறும்.

***********

மார்க் ரூபியோ

பிரதமர் திரு.நரேந்திரமோடியின் தலைமைத்துவத்தின் கீழ் இந்தியா பொருளாதாரத்தில் சிறப்பான வளர்ச்சியை பெற்றுள்ளதோடு சர்வதேச அளவில் மிகப்பெரிய பங்களிப்பை வழங்கி வருவதாக அமெரிக்க அமெரிக்க வெளியுறவு அமைச்சர் மார்க் ரூபியோ புகழாரம் சூட்டியுள்ளார்.

ஊடகம் ஒன்றிற்கு அவர் அளித்த பேட்டியில் அமெரிக்கா - இந்தியாவை நெருங்கிய நட்புறவு நாடாக கருதுவதாக குறிப்பிட்டார்.

பிரதமர் திரு.நரேந்திரமோடி மற்றும் அமெரிக்க அதிபர் ட்ரம்ப் இடையிலான நட்புறவு ஜனநாயகம் மற்றும் தூதரக உறவுகளுக்கு இன்றியமையாதது என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

இரு நாடுகளும் பல்வேறு ஜனநாயக மதிப்பீடுகளை பகிர்ந்து கொள்வதாக சுட்டிக்காட்டிய அவர் வர்த்தகம், விநியோக சங்கிலி, அரிய கனிமங்கள், எரிசக்தி பாதுகாப்பு, தடையற்ற கடல் போக்குவரத்து உள்ளிட்ட துறைகளில் ஒத்துழைப்பிற்கு வாய்ப்பிருப்பதை சுட்டிக்காட்டினார்.

இந்திய அமெரிக்க சமூக பங்களிப்பு இரு நாடுகளுக்கிடையிலான உறவை மேலும் வலுப்படுத்துவதாக அவர் குறிப்பிட்டார்.

***********

சி.பி.ராதாகிருஷ்ணன்

நாட்டின் ஏற்றுமதியில் 50 சதவிகித பங்களிப்பை சிறு குறு நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை வழங்கி வருவதாக குடியரசு துணை தலைவர் திரு.சி.பி.ராதாகிருஷ்ணன் தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் இன்று நடைபெற்ற சிறு குறு நடுத்தர தொழில் நிறுவன நாள் நிகழ்ச்சியில் உரையாற்றிய அவர், எந்த ஒரு நாட்டின் பொருளாதார வலிமையும் இத்துறையை சார்ந்து விளங்குவதாக கூறினார்.

இந்தியாவின் சிறு குறு நடுத்தர தொழில், ஆற்றல்மிகு முதல்தலைமுறை தொழில்முனைவோர்களால் மேம்படுவதாக குறிப்பிட்ட குடியரசு துணை தலைவர், உற்பத்தி மற்றும் உயர் தரத்தை மேம்படுத்த நவீன தொழில்நுட்பத்தை கையாள்வதன் அவசியத்தை வலியுறுத்தினார்.

***********

பாக்யராஜ்

பிரபல இயக்குனரும் நடிகருமான பாக்யராஜ் சென்னையில் மாரடைப்பால் இன்று காலமானார்.

அன்னாருக்கு வயது 73.

திரைப்படத்துறையில் பாக்யராஜ் அளித்த பங்களிப்பை போற்றும் வகையில் அவரது இறுதி சடங்கு முழு அரசு மரியாதையுடன் நடைபெறும் என முதலமைச்சர் திரு.விஜய் அறிவித்துள்ளார்.

சென்னை நுங்கம்பாக்கம் வள்ளுவர் கோட்டத்தில் அவரது இல்லத்தில், பொதுமக்கள் அஞ்சலிக்காக வைக்கப்பட்டுள்ள பாக்யராஜின் உடலுக்கு முதலமைச்சர் திரு.விஜய், திமுக தலைவர் திரு. மு.க.ஸ்டாலின், திரை துறையினர், உள்ளிட்டோர் அஞ்சலி செலுத்தினர்.

நாளை பிற்பகல் பெசன்ட் நகர் மின்மயானத்தில் அவரது உடல் தகனம் செய்யப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

ஈரோடு மாவட்டம் வெள்ளங்கோவிலை சேர்ந்த பாக்யராஜ் 1977 ஆம் ஆண்டு துணை இயக்குனராக தனது திரையுலக பயணத்தை தொடங்கினார்.

இயக்குனர் பாரதிராஜாவின் 16 வயதினிலே, கிழக்கே போகும் ரயில் திரைப்படங்களில் துணை இயக்குனராக பணியாற்றிய அவர், 1979 ஆம் ஆண்டு சுவரில்லாத சித்திரங்கள் திரைப்படம் மூலம் இயக்குனராக அறிமுகம் ஆனார்.

நூற்றுக்கணக்கான திரைப்படங்களில் நடித்துள்ளதோடு, நடிகர், இயக்குனர், எழுத்தாளர் இசையமைப்பாளர் தயாரிப்பாளர் என பன்முக தன்மை கொண்ட வித்தகராக அவர் திகழ்ந்தவர்.

புதிய வார்ப்புகள் திரைப்படத்தில் கதாநாயகனாக நடித்த அவர் அத்திரைப்பட கதை வசனத்திற்காக மாநில அரசின் சிறப்பு விருதை பெற்றுள்ளார்.

அந்த 7 நாட்கள், மௌன கீதங்கள், முந்தானை முடிச்சி தாவணி கனவுகள் என நினைவிலிருந்து நீங்காத 25

திரைப்படங்களுக்கு மேல் இயக்கியுள்ளதோடு பல திரைப்படங்களுக்கு திரைக்கதை எழுதியுள்ளார்.

சிறந்த திரைக்கதை எழுத்தாளர் என பாராட்டப்பட்டுள்ள பாக்யராஜின் திரைப்பட வசனங்களில் எளிமையும், கருத்தாழமும், நகைச்சுவையும் இழைந்திருந்ததால் அவரது வசனங்கள் பெரிய அளவில் வரவேற்பை பெற்றன.

விதி திரைப்படத்தில் நகைச்சுவை காட்சிகளை அவரே எழுதி இயக்கி நடித்திருந்தது அனைவரையும் வெகுவாக கவர்ந்தது.

வசனம்

பாக்யராஜின் திரைப்படங்களில் பாடல்களும் மிக முக்கிய பங்களிப்பை வழங்கின.

பாடல்

***********

செங்கோட்டையன்

தமிழக பேரிடர் நிதிக்கு மத்திய அரசு ஆயிரம் கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்துள்ளதாக மாநில வருவாய் பேரிடர் மேலாண்மை துறை அமைச்சர் திரு.செங்கோட்டையன் தெரிவித்துள்ளார்.

ஈரோடு கோபி செட்டி பாளையத்தில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், மாநிலத்தின் மக்கள் தொகை மற்றும் இயற்கை பேரிடர் பாதிப்புகளின் அடிப்படையில் இந்த நிதி ஒதுக்கப்படுவதாக கூறினார்.

வெள்ள சேதங்கள் ஏற்படும் போது மத்திய அரசிடமிருந்து கூடுதல் நிதி பெறுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என கூறிய அவர், மேகதாது அணை விவகாரம் உள்ளிட்ட விஷயங்களில் தமிழகத்தின் உரிமைக்கு தொடர்ந்து குரல் எழுப்பப்படும் என்றார்.

பள்ளி கல்வித்துறையுடன் இணைந்து அவசர தேவைகளுக்கு தொடர்பு கொள்ள ஏதுவாக மாணவர்களின் முகவரி, ஆதார் எண், கல்வி தகுதி, உள்ளிட்ட விவரங்கள் அடங்கிய தரவு வழங்கப்படுவது குறித்து பரிசீலிக்கப்பட்டு வருவதாக கூறினார்.

***********

கமலி

தமிழகத்தில் கால்நடை பராமரிப்புத்துறை டிஜிட்டல் மயமாக்கப்பட்டு வருவதாக மாநில கால்நடை பராமரிப்புத்துறை அமைச்சர் திருமதி கமலி தெரிவித்துள்ளார்.

திருப்பூர் கால்நடை பண்முக மருத்துவமனையில் இன்று ஆய்வு மேற்கொண்ட பின் செய்தியாளரிடம் பேசிய அவர், இதுவரை 65 சதவிகிதத்திற்கும் மேற்பட்ட விவரங்கள் இணையதளத்தில் பதிவேற்றம் செய்யப்பட்ட நிலையில் மீதமுள்ள பணிகள் செப்டம்பர் மாதத்திற்குள் முடிவடையும் என்றார்.

இம்மருத்துவமனைக்கு தேவையான உள்கட்டமைப்பு வசதிகள் செய்து தரப்படும் என்றும் உறுதியளித்தார்.

***********

போலியோ

தேசிய போலியோ சொட்டு மருந்து முகாம் நாளை நடைபெறுகிறது.

தமிழகத்தில் 5 வயதிற்குட்பட்ட 52 லட்சத்து 90 ஆயிரம் குழந்தைகளுக்கு, 43 ஆயிரத்திற்கும் மேற்பட்ட மையங்களில் போலியோ சொட்டு மருந்து வழங்க திட்டமிடப்பட்டுள்ளது.

முதலமைச்சர் திரு.விஜய் சென்னை பாலவாக்கத்தில் போலியோ சொட்டு மருந்து முகாமை தொடங்கிவைக்கிறார்.

அனைத்து ஆரம்ப சுகாதார நிலையங்கள், அரசு மருத்துவமனைகள், அங்கன்வாடி மையங்கள், பள்ளிகள், ரயில் பேருந்து நிலையங்கள் உள்ளிட்ட மக்கள் அதிகம் கூடும் இடங்களில் நடைபெறும் இம்முகாமை பெற்றோர்கள் முழுமையாக பயன்படுத்திக்கொள்ளுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

திருப்பூர் மாவட்டத்தில் ஆயிரத்து 186 மையங்களிலும்,

அரியலூர் மாவட்டத்தில் 58 ஆயிரத்திற்கும் மேற்பட்ட குழந்தைகளுக்கும் சொட்டு மருந்து வழங்கப்பட உள்ளது.

***********

மதிமுக

திமுக கூட்டணியிலிருந்து மதிமுக விலகியுள்ளது.

சென்னையில் இன்று நடைபெற்ற மதிமுக-வின் பொதுக்குழு கூட்டத்தில் இதற்கான முடிவு எட்டப்பட்டது.

நடந்து முடிந்த தமிழக சட்டமன்ற தேர்தலில் திமுக கூட்டணியில் உதய சூரியன் சின்னத்தில் இரண்டு

தொகுதிகளில் போட்டியிட்டு ம.தி.மு.க வெற்றிபெற்றிருந்தது குறிப்பிடத்தக்கது.

காங்கிரஸ், இடதுசாரி, ஐ.யூ.எம்.எல். கட்சிகளை தொடர்ந்து மதிமுக-வும் திமுக கூட்டணியிலிருந்து வெளியேறியுள்ளது.

***********

நயினார் நாகேந்திரன்

தமிழ்நாட்டில் சிங்கப்பெண் அதிரடி படை அமைக்கப்பட்ட பின்னரும், பெண்களுக்கு எதிரான குற்றங்கள் அதிகரித்து வருவதாக பிஜேபி மாநில தலைவர் திரு. நயினார் நாகேந்திரன் கவலை தெரிவித்துள்ளார்.

நெல்லையில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், சட்டப்பேரவையில் ஆதாரமற்ற கருத்துக்களை முதலமைச்சர் தெரிவிப்பதை பேரவை தலைவர் அனுமதிக்க கூடாது என்றார்.

டெல்லி சிறப்பு பிரதிநிதியாக அண்டை மாநிலத்தை சேர்ந்தவரை நியமிப்பது சரியான அணுகுமுறையா என்ற கேள்வி எழும்பியுள்ளதாக அவர் சுட்டிக்காட்டினார்.

மாணாக்கரின் அடையாள அட்டைகளில் சாதி பெயர் குறிப்பிடப்படுவது கண்டனத்திற்குரியது என்றும் அவர் குறிப்பிட்டார்.

***********

இருவரி

சிவகங்கை மாவட்டத்தில் பிரதமரின் நுண்ணீர்பாசன திட்டத்தை விவசாயிகள் பயன்படுத்திக்கொள்ளுமாறு ஆட்சித்தலைவர் திரு.ஆகாஷ் கேட்டுக்கொண்டுள்ளார்.

நெல்லை காவல் சரகத்தில் போதை பொருள் தடுப்பு நடவடிக்கைகள் முழுவீச்சில் நடைபெற்று வருவதாக காவல்துறை துணை தலைவர் திரு.திருநாவுக்கரசு தெரிவித்துள்ளார்.

இன்று நடைபெற்ற போதை ஒழிப்பு விழிப்புணர்வு பாடல் வெளியிடும் நிகழ்ச்சியில் பேசிய அவர், இச்சரகத்திற்குட்பட்ட நெல்லை, தூத்துக்குடி, கன்னியாகுமரி தென்காசி மாவட்டங்களில் இதுவரை ஆயிரத்து 7 வழக்குகள் பதிவு செய்யப்பட்டு ஆயிரத்து 500 பேர் கைது செய்யப்பட்டுள்ளதாக கூறினார்.

விழுப்புரம் மாவட்ட வளர்ச்சிக்கான ஒருங்கிணைப்பு குழு கூட்டம் ஆட்சித்தலைவர் திரு.ஷேக் அப்துல் ரஹ்மான் தலைமையில் இன்று நடைபெற்றது.

மத்திய அரசின் ஜல்ஜீவன் மிஷன், ஊரக வேலை உறுதி திட்டம், பிரதமரின் சாலை மேம்பாட்டு திட்டம் மகளிர் சுய உதவிக்குழு வளர்ச்சிகான செயல்பாடுகள் குறித்து விவாதிக்கப்பட்டது.

தேனி மாவட்டம் கும்பகரை அருவி நீரின்றி வறண்டதால் சுற்றுலா பயணிகளுக்கு தடை விதிக்கப்பட்டுள்ளது.

***********

பேட்மிண்டன்

U.S. ஓப்பன் பேட்மிண்டன் ஆடவர் ஒற்றையர் அரையிறுதிக்கு இந்தியாவின் கிடாம்பி ஸ்ரீகாந்த், **Rounak** Chouhan-ன் ஆகியோர் முன்னேறியுள்ளனர்.

மகளிர் பிரிவில் ஜப்பானின் ரிக்கோவை தோற்கடித்த இந்தியாவின் தேவிகா அரையிறுதிக்கு தகுதிபெற்றுள்ளார்.

***********

இத்துடன் இந்த செய்தியறிக்கை முடிவடைந்தது